

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் புதிய நியாய விலைக் கடையை கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்றத் தலைவர் பாஸ் என்கிற நரசிம்மன், ஒன்றிய செயலாளர்கள் ஓச்சேரி பாலாஜி, தெய்வசிகாமணி, பொதுக்குழு உறுப்பினர் சி.மாணிக்கம், காவேரிப்பாக்கம் பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கறிக்கோழி வளர்ப்புத் தொழிலை

# ‘திராவிட மாடல்’ அரசு பாதுகாக்கும்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் உறுதி!

*சென்னை, பிப்.25*

***சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பேசுகையில், கறிக்கோழி வளர்ப்புத் தொழிலில் நிலவும் பிரச்சனை குறித்து குறிப்பிட்டார்.***

அப்போது குறுக்கிட்டு விளக்கம் அளித்த மீன்வளம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், “கறிக்கோழி வளர்ப்புத் தொழிலை திராவிட மாடல் அரசு பாதுகாக்கும்” என்று உறுதி அளித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டதாவது:

தமிழ்நாட்டில் கறிக்கோழி வளர்ப்புத் தொழிலில் சுமார் 20,000 கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகளும், சுமார் 60 ஒருங்கிணைப்பாளர்களும் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கிடையே ஒப்பந்தம் போடப்பட்டு, தொழில் நடைபெறுகிறது.



கறிக் கோழி வளர்க்கும் விவசாயிகள் கறிக்கோழி உற்பத்திச் செலவு உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வளர்ப்புத் தொகை 20 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று ஆணையிட்டதின் பேரில் விவசாயிகளின் கோரிக்கைகளைக் குறித்து ஆய்வு செய்ய கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆகியோர் அடங்கிய மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டது. குழு அமைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சியர் தலைமையில் இக்குழு கறிக்கோழித் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரிடையேயும் ஆலோசனை மேற்கொண்டு, இத்தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினை கள் குறித்து ஆய்வு செய்ய விரிவான அறிக்கைகள் பெறப்பட்டன.

கோழி வளர்ப்பு விவசாயிகளின் பிரதானக் கோரிக்கையான வளர்ப்புத் தொழில் தற்போது 6.50 லிருந்து 20 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்பது தொடர்பாக வளர்ப்புத் தொகையாக செலவு ஒன்றுக்கு அதிகபட்சமாக 12 ரூபாய் 50 காசுகள் வரை பெறுகிறார்கள் எனத் தெரியவருகிறது.

ரூபாய் 6.50 என்பது வளர்ப்புத் தொகை அல்ல; அது ஒரு குறைந்தபட்ச ஆதரவுத் தொகையாக மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது.

112026 முதல் பண்ணையில் வளர்க்கப்படும் புதிய கோழித் தொகுப்புகளுக்கு கிலோவிற்கு கூடுதலாக ஒரு ரூபாய் வழங்கப்படுகிறது எனவும், கோடைகாலத்திற்கான ஊக்கத்தொகை மட்டும் கோழி இறைச்சியின் சந்தை விலை அதிகரிக்கும் போது ஊக்கத்தொகை வழங்கப்படும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒருங்கிணைப்பாளர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இப்படியாக பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டு, இன்றைக்கு அமைதியாக நடைபெறுகின்ற அந்த கோழிப் பண்ணை, கோழிக்கறி வளர்ப்பவர்களுடைய அந்த நிலைகளைச் சரிசெய்கின்ற வகையிலே இன்றைக்கு இத்துறையின்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

அந்த உத்தரவை நிறைவேற்றுகின்ற வகையிலே இன்றைக்கு தீவனத் தரத்தின் எண்ணிக்கை, ஆய்வக வசதி அளித்தல், நோய் தடுப்புப் பணிகள், பண்ணைப் பராமரிப்புக்காக தொழில்நுட்ப ஆலோசனைகள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதுபோல, இலவச மின் திட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதுபோல, அவர்கள் கோழிப்பண்ணையில் பயன்படுத்தும் தேங்காய் நார்கள் விலையை குறைப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்ற வகையிலே கோரிக்கைகள் வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகள் எல்லாம் இன்றைக்கு அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதனைக் கொண்டு சென்று, அதையெல்லாம் பேசி தொழில் அமைதியாக நடைபெறுவதற்கான நடைமுறைகளை அரசு செய்யும் என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### கே.வி.குப்பம் சி.கோபி தலைமை!

# முரசொலி வாசிப்பு மன்ற துவக்க விழா கருத்தரங்கம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி.சிறப்புரை!

*வேலூர், பிப். 25 -*

வேலூர் வடக்கு மாவட்டம் கே.வி.குப்பம் சந்தை மேடு எதிரில் ஒய்.ஜி. மகால் அருகில், முரசொலி தமிழ் மன்றம் சார்பில் 27.02.2026 வெள்ளிகிழமை மாலை 5.00 மணியளவில், கழக தலைவர், திராவிட நல்லாட்சி நாயகர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் இனிய பிறந்தநாள் விழாவும், 25 ஊராட்சிகளில் முரசொலி வாசிப்பு மன்றங்கள் துவக்க விழாவும், களத்தில் முதல் போர்வாள் முரசொலி எனும் தலைப்பில் உரைவீச்சு கருத்தரங்க கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் (ம) முரசொலி தமிழ் மன்ற நிறுவனர் கே.வி.குப்பம் சி. கோபி தலைமை தாங்கிட, ஒன்றிய கழக செயலாளர் கே. சீதாராமன் துவக்கவுரையாற்ற இரா.தாமோதரம், எம் அசோக்குமார், கேபி. கருணாநிதி, வழக்கறிஞர் சு.மோகன்ராஜ், கே. குப்பன், சே.மோகன் ஆகியோர் முன்னிலை வகிக்க, சா.பரிமளம், ஜி. இளங்கோ ஆகியோர் வரவேற்கின்றனர்.

வேலூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. முரசொலி வாசிப்பை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார். செல்வி தேவ. நர்மதா உரைவீச்சு செய்ய, வெ.சடகோபன், துரைசிங்காரம், ஒன்றிய கழக செயலாளர்கள் லோ. இரவிச்சந்திரன் (ஒ.கு.தலைவர்) இரா. முருகேசன் மற்றும்,

வி.கே.ஆர்.சந்தரவடிவேலு, கே.தயாளமூர்த்தி, விடி.சிவகுமார், வி.டி. ஜெயக்குமார், வெ.ஜெயராஜ், பாரதிவெங்கடேசன், கவிதாசுதாசேகர், சா.குமரன், மரு.கோவி. தூயவன் இவர்களுடன் முரசொலி வாசிப்பு புரவலர்கள், கழக தோழர்கள் கலந்துக்கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

முடிவில் மேற்கு ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் பல.விஜய் நன்றி கூறுகிறார்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் மெட்டுச்சாலையில் மார்ச் 1 அன்று பிறந்தநாள் காணும் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு மாநில கழக தீர்மானக் குழு இணைச் செயலாளர் முன்னாள் தேனி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் எம்.ஜெயக்குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் இரட்டை மாட்டு வண்டி பந்தயத்தை தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார் வெற்றி பெற்றவர்களுக்கு மாநில கழக தீர்மான குழு இணைச் செயலாளர் முன்னாள் தேனி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் எம்.ஜெயக்குமார் பரிசு வழங்கினார். கம்பம் வடக்கு நகர செயலாளர் வீரபாண்டியன், கம்பம் தெற்கு நகர செயலாளர் பால்பாண்டி, ராஜா மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் ப.சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், டாக்டர் மாசிலாமணி செந்தமிழ்ச் செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன்,சீனி சின்னராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### முதல்வர் – துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு

# 1001 கிரிக்கெட் அணிகளுக்கு கிரிக்கெட் உபகரணங்கள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்!

*சிவகங்கை, பிப். 25 -*

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முதல்வர் கழகத் தலைவர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ் .நாராயணன் ஏற்பாட்டின் பேரில் 1001 கிரிக்கெட் அணிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் வரவேற்று பேசினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில கழக செய்தி தொடர்பு துணை தலைவர் மருது அழகுராஜ், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், பேருராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

நிகழ்ச்சியில் 1001 கிரிக்கெட் அணிகளுக்கு கிரிக்கெட் உபகரணங்களை வழங்கி மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா சிவகங்கை மாவட்டத்தில் மாவட்டக் கழகம் சார்பில் பல்வேறு அணிகள் சார்பில் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. கடந்த ஐந்து ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் பயன் அடைந்துள்ளார்கள். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதும் விளையாட்டு அணி முற்றிலும் மாறுபட்டு உள்ளது.

பல்வேறு மாநிலங்களில் நடத்த முடியாத போட்டிகள் நமது மாநிலத்தில் துணை முதலமைச்சர் ஏற்பாட்டின் பேரில் முதல் வர் கழக தலைவர் தளபதி அவர்கள் ஆலோசனையுடன் சிறப்பாக நடைபெற்றது. விளையாட்டு துறையில் சிறப்பான வீரர்களுக்கு 3% அரசு வேலை இட ஒதுக்கீடு என்று அறிவிக்கப்பட்டு ஆயிரத்து கணக்கான விளையாட்டு வீரர்களுக்கு வேலைக் காண ஆணையும் வழங்கப்பட்டது. இதுபோக மாவட்டம் தோறும் ஸ்டேடியங்கள் அமைப்பதற்காக ஏற்பாடுகள் நடைபெற்று ஆங்காங்கே பணிகள் நடைபெற்று வருகிறது. துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு துறைக்கு பொறுப்பேற்றதும் இந்தியாவிலேயே தமிழகத்தில் பல்வேறு விளையாட்டு கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது இதன் முலம் .பல்வேறு நகர கிராமப்புறங் களில் உள்ள விளையாட்டு வீரர்களின் திறமைகள் வெளிக்கொணரப்பட்டு வருகிறது. கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைவர் கலைஞர் வழியில் சிறப்பான முறையில் மகத்தான ஆட்சியை நடத்தி வருகிறார். கல்வி, மருத்துவத்திற்கு தரும் முக்கியத்தை விளையாட்டு வீரர்களுக்கு அளித்து அவர்களை ஊக்கப்படுத்தி வருகிறார். நமது இளைஞர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று விரும்புகிறார். உடல் நலத்திற்கு விளையாட்டு என்பது மிக முக்கியமானதாகும்.. எனவே இளைஞர்கள் கல்வியை எவ்வாறு கற்கிறோமோ அது போல் விளையாட்டுகளிலும் தாங்களது திறமையை வெளிக் கொணரவேண்டும். அதற்கு திராவிட மாடல் அரசு உங்களுக்கு என்றும் உறுதுணையாக நிற்கும். தொடர்ந்து 2026ல் நடைபெறும் சட்டமன்ற தேர்தலிலும் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் ஆட்சி அமைய வேண்டும். இதனால் தொடர்ந்து இளைஞர்களும் வாழ்வில் சிறப்பான தொரு முன்னேற்றம் அடைய பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும். கழக தலைவர் தளபதியின் ஆட்சி இளைஞர்கள், மாணவர்கள், வயதானவர்கள் என்று முத்தரப்பினருக்கும் பாகுபாடற்ற சமமான ஆட்சி நடைபெற்று வருகிறது. இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து கழக தலைவர் தளபதி அவர்களுக்கு ஆதரவு தர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் விளையாட்டு அணி அமைப்பாளர் ஹரி நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் எஸ். சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், குன்னக்குடி சுப்பிரமணியன், ஏ.எம்.கண்ணன், தாஸ், புதூர் கண்ணன், பஷீர் கே.மனோகரன், எஸ். முத்துக்குமார் ஆர்.கார்த்திகேயன், எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், கதி.ராஜ்குமார், ஏ.டி.என். ரவி, தமிழ்செல்வன், ஷாஜகான் ராம.ரவிதாஸ், சுப்பிரமணியன் மற்றும் தொகுதி முழுதும் உள்ள நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் 1001 அணிகளுக்கு 15 ஆயிரத் ததிற்கும் மேற்பட்ட வீரர்களுக்கு கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் தலைமையில் விளையாட்டு அணி நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம் உயர்கல்வித்துறை சார்பில், பண்ருட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினர். பண்ருட்டி நிகழ்வில் நகர மன்றத் தலைவர் க.இராஜேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆர்.எஸ்.தணிகைசெல்வம், அண்ணாகிராமம் ஒன்றிய கழக செயலாளர் வி.கே.வெங்கட்ராமன், மேற்கு ஒன்றியம் இராமு . பண்ருட்டி வட்டாட்சியர் பிரகாஷ், கல்லூரி முதல்வர் சக்கரவர்த்தி, ஜி.கதிர்காமன், ஆர்.ராஜா, ஆர்.கே.ராமலிங்கம், வழக்கறிஞர் மதனகுரு, அரசு அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தே. பொன்னுசாமி

**பிப்ரவரி 25 (1986)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**திருச்சி மாவட்டம் முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர் பொதுக்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**முசிறி வட்டம், விவசாய கூட்டுறவு வங்கி தலைவராகவும், குணசீலம் ஊராட்சித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**